Tiaano Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Mar. 11 : 466 Nos.
  - Up to Feb. 11 : 458 Nos.
- **Performance March '11 …**
  - Turnover growth : 9.3%
  - Employment growth : [-4.3%]
  - 100% Attendance : 27.55%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels &Tanks

Hydro Gen Go Green – HHO Generators

Titanictrade We Deliver Value Chain – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Play School

## ACHIEVEMENT




## கலைகளுள் கடினமான கலை

ஒரு மனிதனுக்குத் தான் கடந்து வந்த பாதை மீது பார்வை எப்போதும் இருக்க வேண்டும். வந்த வழி தெரியாவிட்டால் போகிற பாதை புரியாது என்பார்கள்.

பழையதை நினைத்துப் பார்க்காவிட்டால், வாழ்வில் நிதானம் என்பதே பிடிபடாது. கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்கள் கடந்து வந்த பாதையை எண்ணிப் பார்க்காவிட்டால் ஆட்டம் போட்டு அடங்கிப் போகத் தான் வேண்டும். நல்ல வளர்ச்சியிலும், வளர்வதற்குக் காரணமாக இருந்த நான்கு பேர்கள் முதல் பத்துப் பேர்கள் வரை அவ்வப்போது நினைவிற்கு கொண்டு வர வேண்டும். இது நன்றியின் வெளிப்பாடு மட்டுமல்ல, நம்மால் பிறருக்கு இப்படி உதவ முடியுமா? என்கிற உந்து சக்தியாகவும் அது இருக்கும்.

அடுத்து, முன்னோக்கிப் பார்த்தல். தீர்க்க தரிசனங்களும் வருங்காலத் திட்டங்களும் இல்லாதவர்களே நம்மில் பலராக இருக்கிறார்கள். முன்னோக்குப் பார்வை இல்லாதது எண்ணெய் இல்லாத விளக்கிற்குச் சமம். முன்னோக்குப் பார்வையே நம்மை உற்சாகம் குன்றாமல் ஓடியாடி உழைக்க வைக்கும் ஊக்க மருந்தாகும்.

அடுத்து, நம்மைச் சுற்றிய பார்வை. நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்கிற பார்வை இல்லாதவர்கள், தம் சுயங்களை இழந்து போகிறார்கள். கூடவே ஓடி வருகிறவனின் வேகத்தைப் பார்த்துதான் ஒருவனது ஓட்டப் பந்தய வேகம் அதிகரிக்கும். தனியாக ஓடும் போது எப்படி வேகம் வரும்? சூழ்நிலை அறிதலே நம்மைச் சுற்றிய பார்வையின் நோக்கம். இறுதியில் முக்கியமாக வருகிறது நமக்குள் பார்க்க வேண்டிய பார்வை(look within), "நாம் யார்? நம் ஆற்றல் என்ன? நம் பலவீனங்கள் என்ன? என்பதைக் கணித்தறியாதவர்கள் மூடர்களே," (Know themself) என்பார்கள் ஆங்கிலத்தில்.

**கலைகளுள் கடினமான கலை ஒருவன் தன்னைத் தானே உணர்வது தான். கண்களை மூடியபடி சிந்திக்க, நமக்குள் நாம் ஆழமாகப் பயணிக்க முடியும். இந்தப் பயணமே எத்தகைய சூழலிலும் வாழ்வைச் சுகமாக்க வல்லது!.**

நன்றி : லேனாவின் ஒரு பக்க கட்டுரைகள்

## FUNCTIONAL WISHES



உழைப்பாளர் தினம்

**May 01st**

***Best Wishes by Tiaano Employees***

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel:22294565<br>Jeya Clinic,<br>Tel: 0-9840873107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. T. Stephen** – Production | May 02 |
| **Mr. Y. Merlin Ebby** – Production | May 03 |
| **Mr. M. Jegatheesh** – Production | May 04 |
| **Ms. C. Bavani** – Administration | May 04 |
| **Mr.S. Dhilip Kumar** – Production | May 05 |
| **Mr. D. Rajkumar** – Production | May 05 |
| **Mr. S. Chinnathangam -** Coating | May 10 |
| **Mr. T. Raja Singh** – Fibtec | May 10 |
| **Ms. Tulasi** – Administration | May 15 |
| **Mr. L. Marimuthu** – Fibtec | May 15 |
| **Mr. P. Porselvan** – Utilities | May 20 |
| **Mr. K. Saravanan** – Production | May 20 |
| **Mr. T. Dinesh** – Production | May 21 |
| **Mr. T. Amala Dhas** – Stores | May 21 |
| **Ms. L. Menaka** – Facilitation | May 25 |
| **Ms. P. Jeyalakshmi** – Design | May 25 |
| **Mr. P. Karnan** – Production | May 25 |
| **Mr. N. Murugan** – Projects | May 26 |
| **Ms. Yagavalli** – Administration | May 30 |
| **Mr. M. Ramesh** – Production | May 31 |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

நடுவீதியில் ஒரு பாறையை வைக்கச் சொன்னான் அரசன். கடந்து செல்பவர்கள் அதனை அகற்றுகிறார்களா என்று காண விரும்பினான். அனைவரும் சுற்றிக் கொண்டு சென்றார்கள். காய்கறிகள் விற்கிற மனிதன் ஒருவன் வந்தான். சிரமப்பட்டுப் பாறையை நகர்த்தினான்.

பாறைக்குக் கீழே ஒரு பொற்கிழியை அரசன் வைத்திருந்தான். "இந்தத் தடையை அகற்றுபவருக்கு இந்தப் பரிசு" என்று எழுதியிருந்தது. வாழ்க்கைப் பாதையிலும் சில தடைகள் உள்ளன. அவற்றை விட்டு விலகிச் செல்ல முயற்சிப்பது கோழைத்தனம். தடையை அகற்றினால் அங்கே நமக்கும் ஒரு பரிசு காத்திருக்கும்.

**"வாய்ப்பு என்கிற வசீகரப் பரிசு"**

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## நாவடக்கம்

உடம்பில் உள்ள உறுப்புகளில் வாய்க்குத் தான் அதிகமான வேலையைக் கொடுக்கிறோம். சாப்பிடுவது மட்டுமின்றி, பேசுவது என்று இரு செயல்களில் வாய் ஈடுபடுகிறது. "வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி" என்பார்கள், இதில் சாப்பாடு, பேச்சு என்ற இரண்டு விஷயங்களும் அடங்குகின்றன. இவை இரண்டையுமே நாம் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது.

நடைமுறையில் நம் தேவைக்கு அதிகமாக வாய்க்கு வேலை கொடுக்கிறோம். நொறுக்குத்தீனி, பானம் என்று ஏதாவது ஒன்றை நாம் சாப்பிட்டுக் கொண்டும், பருகிக் கொண்டும் இருக்கிறோம். இவ்விரண்டுமே நம்மை வேண்டாத பிரச்னைகளில் தள்ளி விடும். அது போல் பேசுவதாக இருந்தால் நல்லவற்றைப் பற்றி பேசுங்கள், இறைவனைப் பற்றி பேசுங்கள், அடுத்தவரைப் பற்றி புறங்கூறுவதையும் நிறுத்துங்கள், நமது பேச்சால் பயன் இருக்குமெனில் மட்டுமே பேசுங்கள். இல்லாவிட்டால் மவுனமாக இருக்கப் பழகுங்கள்.

Compiled by : M. Ranjith
Marketing

## A "WILL FINDS A WAY"

**"Will Power"** is the inner-power that grants the strength, to make decision, take action and execute tasks and to refuse to indulge in unnecessary harmful habits also; it strengthens us to overcome inner-resistances.

Therefore, we should train our inner - power and gain strength; because, Willingness is the key to success, we can improve our lives become great successor just by manifesting **Will, self discipline and ambition.**

Compiled by : Mr. S.V. Kannabiran
Marketing

## தெரிந்து கொள்வோம்

### வாரத்திற்கு பெயர் வந்த விதம்

**Sunday** – சூரியனிலிருந்து(Sun)வந்தது.

**Monday** – சந்திரனிலிருந்து(Moon) வந்தது.

**Tuesday** – டியூ(Tue) எனப்படும் போர்க் கடவுளின் பெயரிலிருந்து வந்தது.

**Wednesday** – வோடன்(Woden)என்ற ஆங்கில சேக்ஸான் தலையாய கடவுளின் பெயரிலிருந்து வந்தது.

**Thursday** - தர்(Thur) எனப்படும் "இடி" கடவுளின் பெயரிலிருந்து வந்தது.

**Friday** – ஃப்ரிக்(Frig) என்ற தேவதையின் பெயரிலிருந்து வந்தது.

**Saturday** – சாட்டர்ன் (Saturn)எனப்படும் ரோமானியர்களின் அறுவடைக் கடவுளின் பெயரிலிருந்து வந்தது.

தொகுத்தளித்தவர்: Mr. M. Kumar
-Design

### கொத்தமல்லி

உலகில் முதன் முதலாக உணரப்பட்ட மருத்துவப் பொருள் மூலிகைகளே. நாம் அன்றாடம் பயன்படுத்தும் கீரை, காய்கள், கனிகள் அனைத்துமே ஒவ்வொரு வகையில் மருத்துவப் பயன் கொண்டவையாகும்.

கறிவேப்பிலையைப் போல் கொத்தமல்லியும் நம் சமையலில் அதிகம் இடம் பெறும் ஒரு மூலிகைப் பொருள் ஆகும். அது வாசனைக்காக மட்டுமே சேர்க்கப்படுவது என நம்மில் பலர் நினைப்பதுண்டு. ஆனால், வாசனையோடு அதன் மருத்துவக் குணங்களும் சேர்க்கப்படுகிறது என்பதை நாம் அறிந்திருக்க மாட்டோம்.

**கொத்தமல்லியின் பயன்கள்:**

- சுவையின்மையை நீக்கும்
- வாய்ப்புண், வயிற்றுப் புண் குணமாகும்.
- செரிமான சக்தியைத் தூண்டி, உணவை சீரணிக்கச் செய்யும்.
- கண் நரம்புகளில் உள்ள வறட்சியைப் போக்கி கண்ணை பலமடையச் செய்யும்.
- மூக்கடைப்பு, மூக்கில் நீர் வடிதல், தொண்டைக்கட்டு, வறட்டு இருமல் நீக்கும்.
- நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்.

Compiled by: Ms. C. Bavani
Receptionist

## INTERESTING FACTS

1. The microwave was invented when a researcher walked by a radar tube and the chocolate bar melted in his pocket.
2. The moon actually has mirrors on it. They were left there by astronauts who wanted to bounce laser beams from them, so that the distance to the moon can be measured.
3. The most abundant metal in the Earth's crust is aluminum.
4. The most common disease in the world is tooth - decay.
5. The most widely cultivated fruit in the world is Apple. The second is the Pear.
6. The number 111111111 multiplied by itself will result in the number 12,345,678,987,654,321.
7. The number 2520 can be divided by 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, and 10 without having a fractional leftover.
8. The numbers 111, 222 333 444 555 666 777 888 999 are all multiples of 3, multiplied by 37[ex: 3 x 37=111; 6 x 37=222
   9 x 37 =333 and so on ...].
9. The only bone in the human body not connected to another is the hyoid, a V-shaped bone located at the base of the tongue. Its function is to support the tongue and its muscles.
10. The only domestic animal not mentioned in the Bible is the cat.

Compiled by: Alex Linnus
Facilitation

## VALUE OF RELATIONSHIP

A brother and a sister were playing together. The brother had a collection of marbles. The sister had some sweets with her. The brother told her sister that he will give all his marbles in exchange of her sweets. The sister agreed. The brother kept the biggest and the most beautiful marble aside and gave the rest to his sister, but the sister gave all the sweets as she had promised. That night, the sister slept peacefully. But the brother could not sleep peacefully as he was thinking, if his sister had hidden some sweets from him as he had hidden the marble.

The moral is "If we don't value 100% in a relationship we will always have doubt if the other person has the same value of 100% on us. This applies to all relationships like love, friendship, employer-employee etc. Give 100% to everything you do and sleep peacefully".

Compiled by : C. Abilash
Titanic Trade

## கவிதைகள்

### கணினி வேலை

எழுத்துக்கள் மீது நடராஜ விரல்கள்
நாட்டியமாடுவதும்,
கையடக்க மௌஸை கைவிரல்களால்
சீண்டிச் சிரிப்பதும்.
மாயப்படங்களில் மயங்கிக் கிடக்க
இணையப் படிகளில் தவமிருப்பதும்
என கணினி வேலை
எளிதென்பது பலருடைய கணிப்பு.

உண்மைச் சொல்வதெனில்
வயல் தேர்வு துவங்கி
அறுவடை வரை,
விவசாயமும் மென்பொருள்
தயாரிப்பும் ஒன்று தான்.
ஒன்று உழுது செய்வது
இன்னென்று எழுதி செய்வது.
ஒன்று தமிழ்ப் பெயர்களால்
தாலாட்டப் படுவது
ஒன்று ஆங்கிலப் பெயர்களால்
அறியப்படுவது.

வீடு சென்று சேரும்
இரவு பதினோரு மணி சொல்லும்,
கணினி வேலை என்பது
எளிதானதே அல்ல.
கவலையாய்க் கேட்பார் அப்பா.
வேலை ரொம்ப கஷ்டமா?
சிரித்துக் கொண்டே சொல்வேன்
கம்ப்யூட்டர் வேலைல
கஷ்டம் என்னப்பா கஷ்டம்???

தொகுத்தளித்தவர்: Shahul Hameed Bava
Facilitation

### கோபம்

அறிவு உறங்கும் பொழுது
அறியாமையின் அதட்டலில்
விழித்துக் கொள்ளும்
மிருகம்

தொகுத்தளித்தவர்: M. Anand
Marketing

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

## அழைப்பிதழ்

### Tiaano தொழிலாளர்கள் கவனத்திற்கு !

இன்றைய நமது சமுதாய வளர்ச்சிக்கு, முறையான கல்வியறிவு, உடல்நலம், பொருள் வளம், தனிமனித ஒழுக்கம் மற்றும் சுயகட்டுபாடு இன்றியமையாதது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இக்குறிக்கோளை மேம்படுத்தும் வகையில் **Tiaano Vidyashrm**, எனும் கல்விக்கூடம், இளந்தளிர்களுக்காக, சீரான, சிறந்த முறையில், CBSE கல்வி பாடதிட்டப்படி வரும் கல்வியாண்டில் (2011 – 2012), பழைய பெருங்களத்தூரில் துவங்க உள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இக்கல்விக்கூடம் ஓரிரு கல்வியாண்டுக்குள், 5 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட தாம்பரம் முடிச்சூருக்கருகிலுள்ள இயற்கை எழில் நிறைந்த புஷ்பகிரிக்கு நிரந்தரமாக மாற்றி அமைக்கப்பட உள்ளது.

**நமது இளந்தளிர்களுக்கான கல்விக்கூடத்தில் உள்ள அடிப்படை வசதிகள்**

- ✓ கல்வியிற் சிறந்த, அன்பு நிறைந்த ஆசிரியர்கள்.
- ✓ விளையாட்டு பொருட்களுடன் கூடிய பாதுகாப்பான விளையாட்டு மைதானம்.
- ✓ நூத்தஞ்சேரியிலிருந்து கோழி பண்ணை, இராஜகீழ்பாக்கம், தாம்பரம் வழியாக பள்ளி சென்று திரும்பி வர வாகன வசதி.
- ✓ ஒலி ஒளிக்கான அறை (Audio Visual).
- ✓ குளிர்சாதன வசதி நிறைந்த வகுப்பறைகள்.
- ✓ உடனடி மருத்துவ வசதி.
- ✓ அனைவருக்கும் ஏற்ற கல்விக்கட்டணம்.

2011, மார்ச் மாதம் முதல் தேதி முதல் விண்ணப்ப படிவத்தை **www.tiaanovidyashrm.com** வலைத்தளம் மூலம் பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

இவண்,
Ms. P.E. Nancy,
Dir- Admin.

## TITANIM ELECTROLYZER ASSEMBLY

**World's Biggest Capacity Electrolyzer 240 Kg/Hr $Cl_2$ per Electrolyzer**

